# மதுரை மாரத்தான் 2009

இரத்தசோகை விழிப்புணர்வு ஓட்டம்

சனவரி 09, 2009

# Madurai Marathon 2009

Run to Be free from Anaemia

Jan - 09, 2009

NATIONAL RURAL HEALTH MISSION

## கட்டுரை மற்றும் ஓவியப் போட்டிகள்

மதுரை மாநகரிலுள்ள அனைத்துத் தரப்பு மக்களையும் ஒருங்கிணைத்து கடந்த இரண்டாண்டுகளாக நீர் மற்றும் நீராதாரங்களின் அவசியத்தை வலியுறுத்தி மதுரை மாரத்தான் ஓட்டங்களை தானம் அறக்கட்டளை நடத்தி வருகிறது. அதன் தொடர்ச்சியாக இந்த ஆண்டும் இரத்தசோகை நோய் ஒழிப்பினை வலியுறுத்தி வருகின்ற சனவரி 9ஆம் நாள், மதுரை மாரத்தான் ஓட்டங்கள் நடைபெற உள்ளன.

இரத்த சோகை நோய், வளரும் நாடுகளின் சிக்கலாக நீடித்து வருவது பல்வேறு மனித நேய அமைப்புகளுக்கு வேதனை ஏற்படுத்தக் கூடிய ஒன்றாகும். அதிகளவு மக்கள் எண்ணிக்கையைக் கொண்ட இந்திய நாட்டில் சற்றேறக்குறைய 50 விழுக்காட்டினர் இளம் வயதினராக உள்ளனர். பல்வேறு சூழல் காரணமாக இளைஞர்களுள் பெரும்பாலானோர் இரத்த சோகை நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். இது இந்தியாவின் ஒட்டு மொத்த உற்பத்தித் திறனைப் பாதிப்பதோடு, வறுமையால் வாடும் மக்களின் அவல வாழ்க்கையை மேலும் சீரழிக்கும் காரணியாகவும் திகழ்கிறது. இரத்த சோகை குறித்த விழிப்புணர்வை மாணவ, மாணவியருக்கு உருவாக்கும் பொருட்டு தானம் அறக்கட்டளையால், கீழ்க்காணும் தலைப்புகளில் கட்டுரை மற்றும் ஓவியப் போட்டிகள் நடத்தப்பட உள்ளன.

தலைப்பு 1: சோகையற்ற (இரத்த சோகையற்ற) வாழ்வே குறைவற்ற செல்வம்

தலைப்பு 2: இரத்த சோகையில்லா உலகைப் படைப்போம்

தலைப்பு 3: வறுமையும், இரத்த சோகையும்

தலைப்பு 4: ஆரோக்கியமில்லா வாழ்விற்கு இரத்த சோகை காரணமா?

தலைப்பு 5: நான் சுகாதார அமைச்சராக இருந்தால் இரத்த சோகை ஒழிப்பதில் எனது பங்கு

தலைப்பு 6: பள்ளிக் குழந்தைளைத் தாக்கும் இரத்தசோகையும், தடுக்கும் முறைகளும்

### கட்டுரைப் போட்டிகள்

| பிரிவு | கட்டுரை போட்டிகள் |
|---|---|
| 6ஆம் வகுப்பு முதல் 8ஆம் வகுப்பு வரை | கொடுக்கப்பட்ட தலைப்புகளில் 250 சொற்களுக்கு மிகாமல் இருத்தல் வேண்டும் |
| 9ஆம் வகுப்பு முதல் 10ஆம் வகுப்பு வரை | கொடுக்கப்பட்ட தலைப்புகளில் 500 சொற்களுக்கு மிகாமல் இருத்தல் வேண்டும் |
| 11ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை | கொடுக்கப்பட்ட தலைப்புகளில் 600 சொற்களுக்கு மிகாமல் இருத்தல் வேண்டும் |
| கல்லூரி மாணவர் | கொடுக்கப்பட்ட தலைப்புகளில் 1000 சொற்களுக்கு மிகாமல் இருத்தல் வேண்டும் |

இப்போட்டியை அந்தந்த பள்ளி, கல்லூரிகள் நடத்தி, தங்களால் தேர்வு செய்யப்படும் முதல் மூன்று பரிசுக்குரிய கட்டுரைகளை மதுரை மாரத்தான் செயலகத்திற்கு அனுப்பவும். அதிலிருந்து தேர்ந்தெடுக்கப்படும் சிறப்புக் கட்டுரைகளுக்கான பரிசுகள் மாரத்தான் நிகழ்வு நாளன்று வழங்கப்படும். ஒவ்வொரு பிரிவின் கீழும் 50க்கும் மேற்பட்ட மாணவர்களைப் பங்கு பெறச் செய்யும் பள்ளி, கல்லூரிகளுக்கு சிறப்புப் பரிசுகள் உண்டு.

### படைப்புகள் அனுப்பவேண்டிய கடைசி நாள் மற்றும் முகவரி

ஜனவரி 5, 2009 (திங்கள் கிழமை)
மதுரை மாரத்தான் செயலகம்
தானம் அறக்கட்டளை, 18, பிள்ளையார் கோவில் தெரு,
சோமசுந்தரம் காலனி, மதுரை - 16. தொ.பே. +91 - 452 - 2301509

### ஓவியப்போட்டி

மாவட்ட அளவில் நடைபெறும் ஓவியப் போட்டியில் அனைத்து கல்லூரி மாணவர்கள், வழங்கப்பட்டுள்ள தலைப்புகளில் கலந்து கொள்ளலாம். இப்போட்டி சனவரி 4ஆம் நாள், பாத்திமா பெண்கள் கல்லூரியில் நடைபெறும். ஓவியப்போட்டிகளுக்கான வரை பொருட்கள் அனைத்தையும் பங்கேற்பாளர்களே கொண்டு வர வேண்டும்.

ஓவியப் போட்டி நடைபெறும் தேதி - சனவரி 4, 2009

இடம்: பாத்திமா கல்லூரி, மதுரை — நேரம்: காலை 10.00 மணி

### விதிமுறைகள்

- முழு A4 (21x28செ.மீ) வெள்ளைத்தாளில் தத்தமது அழகான கையெழுத்தில் போட்டியாளரால் கட்டுரைகள் எழுதப்படுதல் வேண்டும்.
- ஓவியப்போட்டியில் பங்கு பெறுவோர் A3 (30x42செ.மீ.) வெள்ளை அட்டைத்தாளில் வரைதல் வேண்டும். ஓவியம் வண்ணமாகவோ, கறுப்பு வெள்ளையாகவோ இருக்கலாம்.
- 6ஆம் வகுப்பிலிருந்து கல்லூரி வரை பயிலும் மதுரை மாவட்டத்தைச் சார்ந்த அனைத்து மாணவ, மாணவியரும் போட்டிகளில் பங்கேற்கலாம்.
- பள்ளித் தலைமையாசிரியர், கல்லூரி முதல்வரின் அனுமதிச் சான்று மிகவும் அவசியம்.
- ஒருவர் அனைத்துப் போட்டிகளிலும் பங்கேற்கலாம். ஒன்றுக்கு மேற்பட்ட படைப்புகளையும் அனுப்பலாம். ஆனால் ஒரு பரிசுக்கு மட்டுமே மாணவர் உரியவராவார்.
- தங்களால் அனுப்பப்பட்ட படைப்புகள் அனைத்தும் எக்காரணம் கொண்டும் திருப்பி அனுப்ப இயலாது. படைப்புகளை உரிய முறையில் வெளியிடும், காட்சிப்படுத்தும் உரிமை மதுரை மாரத்தான் ஒருங்கிணைப்புக் குழுவையே சாரும்.
- போட்டி குறித்த எந்தவிதமான தொடர்புகளுக்கும் அனுமதியில்லை. நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.

### பரிசுகள்

தேர்வு செய்யப்பட்ட படைப்புகளை சிறு நூலாக வெளியிடவும், மதுரை மாரத்தான் ஒருங்கிணைப்புக் குழுவால் நடத்தப்படவிருக்கும் பல்வேறு பொதுக் கண்காட்சிகளில் படைப்புகள் இடம் பெறவும் முயற்சி மேற்கொள்ளப்படும். சனவரி 09ஆம் நாள் மதுரை தமுக்கம் மைதானத்தில் நடைபெறும் விழாவின் போது வெற்றி பெற்றோருக்குப் பரிசுகள் வழங்கப்படும்

மேலும் விபரங்களுக்கு இணையதள முகவரி www.maduraimarathon.in

## ESSAY WRITING AND DRAWING COMPETITION

DHAN Foundation, Madurai has been organising Madurai Marathon with last two years to promote and conserve water. This year also DHAN is organising a similar marathon on 'Eradication of Anaemia' on 9th Jan 2009. Fifty percent of younger generations and pregnant women are suffering from anaemia due to multifarious reasons. This not only affects the over all productivity but also inflicts greater blow to theLives of the poor.

In order to sensitise boys and girls DHAN Foundation and SHS – TN plan a Madurai Marathon and invites School and College students to participate in the ESSAY WRITING and DRAWING COMPETITIONS on the following topics

Topic 1: ANAEMIA FREE LIFE IS WEALTH

Topic 2: LET US CREATE AN ANAEMIA FREE WORLD

Topic 3: ANAEMIA AND POVERTY

Topic 4: IS ANAEMIA THE REASON FOR POOR HEALTH?

Topic 5: IF I WERE A HEALTH MINISTER, WHAT WOULD I DO TO PREVENT ANAEMIA...

Topic 6: CAUSES AND PREVENTION OF ANAEMIA IN SCHOOL CHILDREN

### Essay Writing Competition

| Category | Essay |
|---|---|
| 6th & 8th standard | About 250 words on any one of the themes |
| 9th & 10th standard | About 500 words on any one of the themes |
| 11th & 12th standard | About 600 words on any one of the themes |
| College | About 1000 words on any one of the themes |

Respective schools and colleges shall conduct the Essay Writing Competition and shall send select first three essays for prize to the organising secretariat of Madurai Marathon 2009. Under each category, schools and colleges conducting Essay Writing Competition with more than fifty participants would get special prizes.

### LAST DATE AND ADDRESS

Last date before January 05, 2009 (Monday)

All entries must reach the following address

Organising Secretariat
Madurai Marathon
DHAN Foundation, 18, Pillaiyar Koil Street, S.S. Colony, Madurai - 16.
Tel: +91 - 452 - 2301509

### DRAWING COMPETITION

School and college students shall participate in the drawing competitions to be organised at District level on the topics mentioned above. The drawing competition will be held on January 4, 2009 at Fathima College, Madurai.

Date: January 4, 2009

Venue: Fathima College, Madurai — Time: 10.00 a.m.

### RULES AND SPECIFICATIONS

- Essays to be submitted in own handwriting on A4 Size (21 x 28cm) Sheets.
- Drawings / Paintings to be submitted in A3 Size (30 x 42 cm) chart papers.
- Entries to be attested as OWN WORK by the competent School/College authorities.
- Multiple entries are allowed, but each person is entitled to only one prize
- Contributions submitted are not returnable. Madurai Marathon will reproduce, publish or exhibit them appropriately.
- The judges' decisions are final and no correspondence will be entertained.

### PRIZES

Attractive Prizes will be awarded to First three places in each category.

Selected essays / drawings will be published in a booklet and exhibited in future public exhibitions by Madurai Marathon.

The prizes for the winners will be given on January 09, 2008 the day of Madurai Marathon.

Learn more at www.maduraimarathon.in

WHAT DOES AN EMPLOYER SEEKS IN YOUR CERTIFICATE?

Of course, The Brand Name!

LEARNING FROM THE LEADERS WILL PREPARE YOU TO BE THE ONE!

.NET COMPLETE
JAVA COMPLETE
ORACLE COMPLETE
HARDWARE
NETWORKING
LINUX

CMC ACADEMY
CREATING GLOBAL PROFESSIONALS

NO.25, WEST PERUMAL MAISTRY STREET
OPP: TO HOTEL SUPREME, MADURAI-1.

Cell: 4371947. 9943929456
Web: cmcltd.com
mail: cmcatc.maduraisouth@gmail.com

CMC ACADEMY
A TATA ENTERPRISE
A SUBSIDIARY OF TCS COMPANY